**உங்கள் குரல் முக்கியம் (Your Voice Matters): நாம் செவிமடுக்கிறோம்!**
**நோயாளிகளுக்கும் குடும்பங்களுக்குமான தகவல்கள்**

1. **‘உங்கள் குரல் முக்கியம்’ என்றால் என்ன?**
‘உங்கள் குரல் முக்கியம்’ என்பது உங்களது உள்ளூர்ப் புற்று நோய் நிலையத்தாலும் Cancer Care Ontario இனாலும் கேட்கப்படும் ஒரு கேள்வித் தொகுதியாகும். அது உங்களது புற்று நோய் நிலையத்துக்கான அல்லது மருத்துமனைக்கான ஒவ்வொரு வருகையையும் பற்றி உங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள உங்களுக்கு வாய்ப்பளிக்கிறது

நீங்கள் மருத்துவமனைக்கு வருகை தரும் போது நீங்கள் சந்திக்கும் ஆட்கள் (உதாரணமாக வரவேற்பாளர், தாதிகள், மருத்துவர்கள்) நீங்கள் உங்களது அனுபவத்தைப் பற்றி எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கக் கூடும். எம்மால் உங்களது புற்று நோய் நிலையத்திலும் ஒன்ராறியோ எங்கிலுமுள்ள எல்லா நோயாளிகளுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் விடயங்களைச் சிறப்பாக்க முடிவதற்காக நாம் நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்களென அறிய விரும்புகிறோம்.

‘உங்கள் குரல் முக்கியம்’ பின்வரும் சந்தரப்பங்களில் உங்களது கருத்தைக் கேட்கும்:

- கேள்விகளுடன் நிலையத்தைத் தொடர்பு கொள்ளல்
- நிலையத்துக்கு வருகை தருதல்
- வரவேற்புடன் ஊடாடுதல்
- உங்களது சுகாதாரப் பராமரிப்பு அணியைச் சந்திக்க உட்படுதல்
- நாளுக்காக நிலையத்தை விட்டுச் செல்லல்

உங்களால் **இப்படிமுறைகள் ஒவ்வொன்றையும்** பற்றியும் உங்களது **ஒட்டுமொத்த அனுபவத்தைப்** பற்றியும் உங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள இயலுமாகும்.

2. **நான் செய்து வந்த நோயறிகுறித் தகுதிகாணலில் இருந்து ‘உங்கள் குரல் முக்கியம்’ எப்படி வேறுபடுகிறது?**
‘உங்கள் குரல் முக்கியம்’ என்பது புற்று நோய் நிலையத்துடனான உங்களது அனுபவத்தைப் பற்றிக் கேட்கும் ஒரு கருத்துக் கணிப்பீடு ஆகும். நோயறிகுறித் தகுதிகாண் வினாக்கொத்து உங்களுக்குள்ள நோயறிகுறிகளைப் பற்றி உங்களது சுகாதாரப் பராமரிப்பு அணிக்குக் கூற உங்களுக்கு உதவும் நோக்கிலான ஒரு கருத்துக் கணிப்பு ஆகும். நீங்கள் உங்களது நோயறிகுறித் தகுதிகாண் வினாக்கொத்தை நிரப்பும் அதே

வேளையிலேயே சாவடியில் ‘உங்கள் குரல் முக்கியம்’ கருத்துக் கணிப்பை நிறைவு செய்யலாம். நீங்கள் உங்களது நோயறிகுறித் தகுதிகாண் வினாக்கொத்துக்கு எவ்வாறு பதிலளிக்கிறீர்கள் என்பது ‘உங்கள் குரல் முக்கியம்’ கருத்துக் கணிப்பிலுள்ள கேள்விகளைப் பாதிக்க மாட்டா. நீங்கள் உங்களது ‘உங்கள் குரல் முக்கியம்’ கருத்துக் கணிப்பீட்டில் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் **இரகசியமானவை** என்பதுடன் அவை உங்களது சுகாதாரப் பராமரிப்பு அணியுடன் பகிர்ந்து கொள்ளப்பட மாட்டா.

3. **‘உங்கள் குரல் முக்கியம்’ என்பதை யார் நிரப்ப வேண்டும்?**
    - புற்று நோய்ச் சிகிச்சையைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஒன்ராறியோவிலுள்ள வயதுவந்த நோயாளிகள்
    - புற்று நோய் முறைமையினூடாக அன்புக்குரிய ஒருவருக்கு ஆதரவளிக்கும் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், பராமரிப்பாளர்கள் ஆகியோர்

4. **நான் எப்படித் தொடங்குவது?**
   நீங்கள் உங்களது ‘உங்கள் குரல் முக்கியம்’ என்பதை வெவ்வேறு வழிகளில் செய்யலாம்.
    - உங்களது புற்று நோய் நிலையத்தில் ஒரு சாவடியில்
    - நீங்கள் உங்களது சந்திப்புக்காகக் காத்திருக்கும் வேளையில் ஒரு பலகைக் கணனியில் (உதாரணமாக பலகைக் கணனி)
    - உங்களது நிலையத்தில் ‘உங்கள் குரல் முக்கியம்’ எவ்வாறு கிடைக்கப் பெறுகிறதெனக் கேளுங்கள்

5. **இது எவ்வளவு காலம் எடுக்கும்?**
   ‘உங்கள் குரல் முக்கியம்’ சராசரியாக 3 நிமிடங்கள் எடுக்கும்.

6. **எனது சுகாதாரப் பராமரிப்பு அணி நான் என்ன சொல்கிறேன் என்பதை அறிந்து கொள்ளுமா?**
   ‘உங்கள் குரல் முக்கியம்’ என்பதற்கான உங்களது பதில்கள் தனிப்படவும் இரகசியமாகவும் வைத்திருக்கப்படும். உங்களது சுகாதாரப் பராமரிப்பு அணி உங்களது பதில்களை அறிந்து கொள்ளாததுடன், உங்களது பதில்கள் உங்களது பராமரிப்பில் தாக்கஞ் செலுத்தா.

7. **எனது பதில்கள் எவ்வாறு நோயாளிகளுக்கான விடயங்களை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும்?**
   புற்று நோய் நிலையத்துக்கான உங்களது ஆக அண்மைய வருகையைப் பற்றிய உங்களது பதில்கள் உங்களது சுகாதாரப் பராமரிப்பு அணிக்கும் Cancer Care Ontario இற்கும் உங்களுக்கு ஆகவும் முக்கியமானது யாதென விளங்கிக்

கொள்ள உதவும். இது எங்களுக்கு நீங்களும் ஏனைய நோயாளிகளும் பெறும் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்த உதவுகிறது.

8. **நான் 'உங்கள் குரல் முக்கியம்' என்பதிலுள்ள எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டுமா?**
நீங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை. கேள்வி உங்களுக்குப் பொருந்தாதாயின், "பொருந்தாது" எனத் தெரிவு செய்யுங்கள். உங்களுக்கு உறுதியாகப் பதில் தெரியாவிடின், "தெரியாது" எனத் தெரிவு செய்யுங்கள். இது ஒன்ராறியோ எங்கிலுமுள்ள புற்று நோயாளிகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்குமாக விடயங்களைச் சிறப்பாக்க உதவ உங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான உங்களது வாய்ப்பாகும்.

9. **'உங்கள் குரல் முக்கியம்' என்பதற்கான எனது பதில்களைப் பயன்படுத்தப் போவது யார்?**
உங்களது புற்று நோய் நிலையமும் Cancer Care Ontario உம். Cancer Care Ontario என்பது தரம், பொறுப்புக் கூறல், புத்தாக்கம், விழுமியம் என்பவற்றை ஏற்படுத்த புற்று நோய் நிலையங்களுடன் சேர்ந்தியங்கி புற்று நோய் முறைமையைச் சிறப்பாக்கச் செயற்படும் ஒரு மாகாண நிறுவனமாகும்.

**'உங்கள் குரல் முக்கியம்' என்பதைப் பற்றி என்னிடம் மேலும் கேள்விகள் இருந்தால் நான் யாரிடம் கேட்க வேண்டும்?**
உங்களிடம் எவையேனும் கேள்விகள் அல்லது கருத்துக்கள் இருந்தால் இங்குள்ள உங்களது உள்ளூர் நிலையப் பராமரிப்புத் தலைவரைத் தொடர்பு கொள்ளுங்கள்:
(insert centre specific contact info)

**பராமரிப்பை மேம்படுத்த உதவியாக உங்களது குரலைப் பகிர்கின்றமைக்காக உங்களுக்கு நன்றி!**